අධිකරණ, රාජ්‍ය පරිපාලන,ස්වදේශ කටයුතු,පළාත් සභා,පළාත් පාලන සහ කම්කරු අමාත්‍යාංශය
நீதி, பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் தொழில் அமைச்சு
Ministry of Justice, Public Administration, Home Affairs, Provincial Councils, Local Government and Labour

රාජ්‍ය පරිපාලන අංශය (ඒකාබද්ධ සේවා) பொது நிருவாகப் பிரிவு (இணைந்த சேவைகள்) Public Administration Division (Combined Services)
නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. *Independence Square, Colombo 07, Sri Lanka*

| දුරකතනය / தொலைபேசி / Telephone | ෆැක්ස් / தொலைநகல் / Fax | ඊ- මේල් / மின்னஞ்சல் / E-mail | වෙබ් අඩවිය / இணைத்தளம் / Web Site |
|---|---|---|---|
| **011- 2696211** | **011- 2695279** | **info@pubad.gov.lk** | **www.pubad.gov.lk** |

| මගේ අංකය / எனது இல / My No | COM/TRANS/V/වා.ස්.මා./2025 | ඔබේ අංකය / உமது இல / Your No | | දිනය / திகதி / Date | 2024.10.18 |
|---|---|---|---|---|---|

அமைச்சுக்களின் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள்

**2025 வருடாந்த இடமாற்றங்கள் – (இணைந்த சேவைகள்)**
**அரசாங்க மொழி பெயர்ப்பாளர் சேவை, இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவை, அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சேவை, இலங்கை அரச நூலகர் சேவை, முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் சேவை, இணைந்த சாரதிகள் சேவை, அலுவலக பணியாளர் சேவை**

இதனுடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இடமாற்றங்களை 2025.01.01 ஆந் திகதியன்று அல்லது அலுவலர்களின் பெயர்களுக்கு முன்னால் குறிப்பிடப்பட்டுள்ள திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தும் வகையில் அனுமதிக்கின்றேன். இது தொடர்பாக அமைச்சின் / திணைக்களத்தின் / அலுவலகத்தின் உரிய அலுவலர்களிற்கு அறிவித்து உரிய தினத்தில் புதிய சேவை நிலையத்தில் கடமையினை பொறுப்பேற்குமாறு அவர்களுக்கு அறிவிக்குமாறு வேண்டுகின்றேன். அரசாங்க சேவைகள் ஆணைக்குழு / இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களுக்கான விசாரணைகள் ஆணைக்குழு / தேர்தல்கள் ஆணைக்குழு ஆகிய சேவை நிலையங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்ட அலுவலர்களின் இடமாற்றங்கள் சம்பந்தமாக நிறுவனத் தலைவர்களின் இணக்கப்பாட்டுடனேயே அவை மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

02. இணைந்த சேவை இடமாற்றக் கட்டளைகளுக்கு உட்பட்ட யாதேனும் அலுவலர் ஒருவருக்கு தங்கள் அமைச்சில் / திணைக்களத்தில் / அலுவலகத்தில் நிறுவப்பட்டுள்ள உள்ளக இடமாற்றக் குழுவினால் உள்ளக இடமாற்றக் கட்டளை வழங்கப்படலாகாது. ஏதேனும் காரணத்திற்காக உள்ளக இடமாற்றங்களுக்கான கட்டளைகள் வழங்கப்பட்டிருப்பின் அங்கு இணைந்த சேவை இடமாற்றக் கட்டளையே அமுல்படுத்தப்படல் வேண்டும். அவ்வாறாயினும் அலுவலர்களின் வேண்டுகோளின் பிரகாரம் அமைச்சின் / திணைக்களத்தின் / அலுவலகத்தின் தேவைகளின் அடிப்படையில் அமைச்சுக்கள் / திணைக்களம் / காரியாலயத்தினால் வழங்கப்பட்டுள்ள இடமாற்றக் கட்டளைகளே அமுல்படுத்தப்படல் வேண்டுமென தாங்கள் கருதும் பட்சத்தில் இக்கடிதத்தில் 06 வது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தினத்திற்கு முன்னர் தங்களது சிபாரிசுடன் குறித்த வேண்டுகோள் தொடர்பாக மேலதிக ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வது பொருத்தமானதாகும்.

03. இந்த இடமாற்ற கட்டளைக்கு உட்படுகின்ற அலுவலர் ஒருவருக்கு 2024.12.31 ஆம் திகதி வரையில் பிற்போடப்பட்ட இதற்கு முன்னர் வழங்கப்பட்டுள்ள இடமாற்ற கட்டளை இருப்பின் அவ்வாறான அலுவலர்

ஒருவருக்கு மீண்டும் 2025 ஆம் ஆண்டிற்கான வருடாந்த இடமாற்ற கட்டளை ஒன்றின் மூலம் வேறொரு இடமாற்றக் கட்டளை வழங்கப்பட்டிருப்பின் அதன்போது முன்னர் வழங்கப்பட்ட இடமாற்றக் கட்டளை வலுவிழந்துவிடும் என்பதனைக் கவனத்திற் கொள்ளவும்.

04. இவ்விடமாற்றங்களை மேற்கொள்ளும் போது இடமாற்றச் சபையினால் பின்பற்றப்பட்ட இடமாற்ற நடைமுறைகள், 2024.07.29 ஆம் திகதிய 02/2024 இலக்க இணைந்த சேவைகள் சுற்றறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அந்த சுற்றறிக்கையில் அல்லது இல. 2310/29 உடைய அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் நடைமுறை ஒழுங்கு விதிகள் (தொகுதி இலக்கம் 1) இன் XVIII அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தமது இடமாற்ற கோரிக்கைகள் தொடர்பாக வருடாந்த இடமாற்றக் குழுவின் கவனத்திற்கு உட்பட்டிராத பட்சத்தில் மாத்திரம் வருடாந்த இடமாற்ற முன்மொழிவு மீளாய்வு குழுவிடம் கருத்துக்களை சமர்ப்பிக்க முடியும்.

05. அரசாங்க சேவைகள் ஆணைக்குழு செயலாளரின் இலக்கம் PSC/APL/07/14/2013 மற்றும் 2013.09.13 ஆம் திகதிய கடிதத்தின் கட்டளைகளின் பிரகாரம் வருடாந்த இடமாற்ற மீளாய்வு குழுவின் தீர்மானத்தின் பின்னர் மீண்டும் மேற்கொள்கின்ற மேன்முறையீடுகள் தொடர்பில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் முடிவு வழங்கப்பட்டதன் பின்னர் சமர்ப்பிக்கப்படுகின்ற மேன்முறையீடுகள், குறைகள் அல்லது திணைக்களத் தலைவர்களின் சிபாரிசுகள் மீது வருடாந்த இடமாற்ற தீர்மானங்களை உரிய தினத்திற்குப் பின்னர் பிற்போடப்பட மாட்டாது. வருடாந்த இடமாற்றங்கள் தொடர்பிலான மேன்முறையீடு ஒன்றிற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட தீர்மானங்கள், அத்தீர்மானங்களை தடுக்கின்ற கட்டளையொன்று இல்லாத பட்சத்தில் உடனடியாக அமுல்படுத்துதல் வேண்டும்.

06. இணைந்த சேவைகளின் அனைத்து அலுவலர்களினதும் வருடாந்த இடமாற்றம் தொடர்பான மேன்முறையீடுகளை சமர்ப்பிப்பதற்கு

i. LGN Wi-Fi வலைப்பின்னலை பயன்படுத்தி இணையத்தை அணுகுவதாயின் http://10.250.1.112/misco ஊடாகவும்,
ii. பிற வலைப்பின்னல் மூலமாக இணைய வசதியினை அணுகுவதாயின் http://43.224.125.68/misco எனும்,

இணையதள முகவரியினுடாக ஒன்லைன் மென்பொருளினுள் (Online Application) உள்நுழைந்து, தங்கள் மேல்முறையீட்டினை 2024.11.01 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும். அத்துடன் அவ்விண்ணப்பப் படிவத்தின் வன்பிரதியினை திணைக்கள தலைவரினூடாக வருடாந்த இடமாற்ற மேன்முறையீட்டுக் குழுவிற்கு அனுப்பி வைக்குமாறு தயவுடன் அறியத்தருகின்றேன்.

07. 2025 வருடாந்த இடமாற்ற தீர்மானங்களின் படி, தமது அலுவலகங்களில் இருந்து இடமாற்றங்களை பெற்றுச் செல்லும் மற்றும் தங்களின் அலுவலகங்களுக்கு இடமாற்றங்களை பெற்று வரும் இணைந்த சேவைகளின் அலுவலர்களது பெயர் விபரங்களை, ஒன்லைன் மென்பொருளில் Transfer → Report இல் Transfer Report –I மற்றும் Transfer Report –II மூலமாக பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் உங்கள் அமைச்சுக்கு / திணைக்களத்திற்கு / அலுவலகத்திற்கு வெளியே இடமாற்றம் வழங்கப்பட்டுள்ள அலுவலர்களை **பதிலாள் வரும் வரை வைத்திருக்காது** உரிய திகதியில் புதிய சேவை நிலையத்தில்

கடமையினைப் பொறுப்பேற்கக்கூடியவாறு விடுவிக்குமாறு அறியத்தருவதுடன், இந்த இடமாற்றங்களைத் தாமதமின்றி அமுல்படுத்துதல் வேண்டும் எனவும் அறியத் தருகிறேன். முறையான அனுமதியின்றி இந்த இடமாற்றங்களை புறக்கணிக்கின்ற அலுவலர்கள் தொடர்பில் 02/2024 இணைந்த சேவை சுற்றறிக்கையின் 9.4 ஆவது பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க முடியும் என்பதனையும் மேலும் அறிவிக்கின்றேன்.

08. தற்போது பணியாற்றும் சேவை நிலையங்களில் உரிய காலத்தைப் பூர்த்தி செய்திராத அலுவலர்களுக்கு இந்த வருடாந்த இடமாற்றத்திற்காக பிரயாணச் செலவு வழங்கப்பட மாட்டாது. உரிய காலத்தைப் பூர்த்தி செய்துள்ள அலுவலர்களுக்கு தாபன விதிக் கோவையின் நடைமுறைகளுக்கு அமைவாக பிரயாணச் செலவு வழங்குதல் வேண்டும். எனினும் தங்கியிருத்தல் கொடுப்பனவு வழங்கப்படமாட்டாது.

09. அமைச்சுக்களின் நோக்கத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் காரணமாக சில அலுவலர்களின் சேவை நிலையங்களில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதால் அத்தகைய சேவை நிலையத்தில் சேவையாற்றும் அலுவலரொருவருக்கு 2025 வருடாந்த இடமாற்ற தீர்மானங்களின் படி இடமாற்றம் வழங்கப்படுள்ளதாயின், அவ் அலுவலர் தற்போது சேவையாற்றும் சேவை நிலையத்தில் அவரது பதிலீட்டு அலுவலர் கடமையினை பொறுப்பேற்க வேண்டும். பிராந்திய அலுவலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ள அலுவலர்கள் தலைமை அலுவலகத்தில் சேவை அறிக்கையிட்ட பின்னர் உரிய பிராந்திய அலுவலகத்திற்கு இணைக்கப்பட வேண்டும் என்பதுடன் அவ் அலுலர்களை தலைமை அலுவலகத்தில் தக்க வைக்காது அவருக்கு இடமாற்றம் கிடைக்கப்பெற்றுள்ள பிராந்திய அலுவலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட நிறுவனத் தலைவர் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

10. அத்துடன் தாபன பணிப்பாளர் நாயகத்தின் இல. EST-6/03/LEA/3165(3) மற்றும் 2024.06.11 ஆந் திகதிய கடிதத்தின் அறிவுறுத்தலுக்கமைவாக 2025 வருடாந்த இடமாற்ற உத்தரவு வழங்கப்பட்டுள்ள அலுவலர் எவரும் தற்போதைய சேவை நிலையத்தில் 2022.06.22 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 14/2022 அல்லது அதனுடன் தொடர்புடைய சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளின் கீழ் விடுமுறை அனுமதியினை பெறமுடியாது.

11. தேர்தல் ஆணைக்குழு செயலாளரின் EC/SO/PE/2024/6-4B (i) இலக்க 12.10.2024 திகதிய கடிதத்தின் ஊடாக, தேர்தல் செயற்பாடுகளுக்கு இடையூறுகள் ஏற்படாதவண்ணம் இணைந்த சேவைகள் அலுவலர்களின் வருடாந்த இடமாற்ற நடைமுறைகள் வழமை போல் நடைபெறவும், மற்றும் 2025 ஆம் ஆண்டின் வருடாந்த இடமாற்றங்களை 2025.01.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கும் தேர்தல் ஆணைக்குழுவால் வழங்கப்பட்டுள்ள ஒப்புதலின் அடிப்படையில் இந்த இடமாற்ற கட்டளைகள் வெளியிடப்படுகின்றன.

ஒப்பம்/ ஆர்.எம்.என்.ஈ.கே. ரணசிங்க

இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் (பதில்)

தொலைபேசி இல. : 011 2694560

ஃபக்ஸ் : 011 2692254

மின்னஞ்சல் முகவரி : dgcs.pubad@gmail.com